# எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்ட அறிக்கை - 2025

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டம் 2025 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2024/0001 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | தை 2025 - மார்கழி 2025 |
| அறிக்கையிடல் காலம் | தை 2025 - மார்கழி 2025 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | ஆவணச்சேகரிப்பாளர்கள், நூலகங்கள், எழுத்தாளர்கள், நூலக நிறுவனம் |
| அறிக்கையிடல் காலத்திற்குரிய செயற்றிட்டச் செலவு | 1,276,470 ரூபா |

செயற்றிட்டச் சுருக்கம்

எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டமானது ஆண்டு தோறும் நூலக நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டமாகும். எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள் நூலகத்துக்கு அன்பளிப்பாகவும் இரவலாகவும் வழங்கும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலக நிறுவனச் செயற்றிட்டங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலகச் சேகரிப்பில் விடுபட்ட ஆவணங்களையும் புதிதாக இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களையும் இனங்கண்டு அவற்றை எண்ணிமப்படுத்தல் போன்றவை இச் செயற்த்திட்டதின் முக்கிய செயற்பாடுகளாகும்.

இலக்கு

- இலங்கை தமிழ் சமூகம் சார் பழமையான மற்றும் அரிதான ஆவணங்களை தேடிக்கண்டறிந்து எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல்.

நோக்கம்

- ஒரு வருட செயற்றிட்ட காலத்திற்குள் 1,716 ஆவணங்களையும் 244,800 பக்கங்களை எண்ணிமப்படுத்தி செயற்றிட்டத்தின் கீழ் இணைத்தல்
- இலங்கை தமிழ் சமூகம் சார்ந்த ஐந்து எழுத்தாளர்களது ஆவணங்களை அடையாளங்கண்டு அவற்றை முழுமைப்படுத்தல்.

- அடையாளங்காணப்படும் ஆவணங்களின் ஐந்து சேகரத்தொகுதிகளை பட்டியலிட்டு எண்ணிமப்படுத்தல்.
- செயற்றிட்டத்தின் கீழ் எண்ணிமப்படுத்தப்படும் ஆவணங்களில் 70% ஆவணங்களுக்கான பதிப்புரிமையை பெறல்.

அடைவுகள்

சேகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக இதுவரை பன்முகத்தன்மையினை அடிப்படையாக கொண்டு பிராந்திய ஆவணப்படுத்தல் சார் ஆவணங்கள், மொழி மற்றும் இலக்கியம் சார் ஆவணங்கள் , கல்வி சார் ஆவணங்கள் ஆகியவை எண்ணிமப்படுத்தப்பட்டு திறந்த அணுக்கத்திற்காக விடப்பட்டுள்ளன.

- 2025 ஆம் ஆண்டு இச்செயற்றிட்டத்தின் கீழ் 2,945 ஆவணங்களும், 226,106 பக்கங்களும் எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன.

| ஆவணக வகை | எண்ணிக்கை |
|---|---|
| தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணம் | 255 |
| அரசியல் | 176 |
| சமூகவியல் | 249 |
| பெண்ணியம் | 103 |
| சமயம் | 393 |
| மலர்கள் (பல்கலைக்கழக மலர்,விழா மலர் ) | 495 |
| பல்துறை சார்ந்தவை | 1210 |
| மனித உரிமை | 64 |

**2025** ஆம் ஆண்டில் செயற்றிட்டம் மூலம் முழுமைப்படுத்தப்பட்ட சேகரங்கள்

- ந.அரியரத்தினம் அவர்களது 16 நூல்களும் சேகரிக்கப்பட்டு எண்ணிமப்படுத்தப்பட்டு நூலக சேகர செயற்றிட்டத்தின் மூலம் அனைவருக்கும் இலவச அனுக்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவரது 16 நூல்களும் இந்து சமயம் சார்ந்த நூல்களாக அமைந்துள்ளன.

  [பகுப்பு:அரியரத்தினம், ந.]

**2025** ஆம் ஆண்டில் செயற்றிட்டம் மூலம் பதிப்புரிமை பெறப்பட்டவை

- மட்டக்களப்பு எண்ணிம நூலக சேகரம் செயற்திட்டத்தின் ஊடாக 03 ஆசிரியர்களின் பதிப்புரிமை பெறப்பட்டது.

- யாழ்ப்பாணம் எண்ணிம நூலக சேகரம் செயற்திட்டத்தின் ஊடாக 42 ஆசிரியர்களின் பதிப்புரிமை பெறப்பட்டது.

எதிர்கொண்ட சவால்கள்

- எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் எண்ணிம ஊழியர்கள் அச் செயற்றிட்டத்துடன் ஏனைய செயற்றிட்டங்களுக்காகவும் பங்களித்தமை.
- மின்வருடல் உபகரணங்கள் பழுதடைந்த போது அதற்கான மாற்றீடு எதுவும் இல்லாமை மற்றும் அவற்றை புதிதாக கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தாமதங்களும் இச்செயற்றிட்டத்தில் சவாலாக அமைந்தது.
- மட்டக்களப்பு மற்றும் மலையக அலுவலகங்களில் ஊழியர் , அலுவலகத்திற்கான இடம் போன்ற விடயங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக சீரான நிலையில் எண்ணிமப்படுத்தலை மேற்கொள்ள முடியாமல் போனமை.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இச் செயற்றிட்டத்திற்கான கள ஆய்வாளர் ஒருவரை நியமிப்பதன் மூலம் பரந்தளவிலான சேகரிப்புகளை இனங்கண்டு எண்ணிமப்படுத்த முடியும்.
- அடைவுகளை நோக்கி பயணிக்காமல் சேகரிப்புக்களை முழுமைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட இலக்குகளை நிர்ணயித்தல்.